**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 2, Special Issue - 3, October 2023 E-ISSN: 2583-0481

# Non Vegetarian Food in *Purananooru*

**M. Padmaja,** Reg. No.: 21113154022032, Research Scholar, Tamil Research Centre,
S.T. Hindu College, Nagercoil, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-0267-7336**
**Dr. R. Sorna Bamila,** Assistant Professor of Tamil, Tamil Research Centre,
S.T. Hindu College, Nagercoil, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-3677-4644**
**DOI: 10.5281/zenodo.8397694**

## Abstract

*In the ancient Tamil literature Purananooru, much attention is given to the description of various aspects of life, including food and cuisine. Non-vegetarian food finds mention in some of the poems in Purananooru. The poems portray the consumption of a wide variety of non-vegetarian foods, highlighting its cultural significance and the diverse tastes prevalent during that time. These references help us understand the dietary practices, culinary traditions, and social customs of the people of that era. The poems often describe the hunting and preparation of various animals and birds. While non-vegetarian food was widely consumed during the era when Purananooru was composed, contemporary Tamil culture also includes a significant vegetarian population. The custom of serving food to the guests is found from the Sangam period till today. Hence, the article examines the message of the Tamil people's love of food and the use of the food in their life.*

**Keywords:** Non - Vegetarian, Food, *Purananooru.*

## References

[1] Anu Lekshmi, S. *Natriaiyil Kuruntholilgal*. *Shanlax Pannattu Tamilil Aaivugal*, Issue 8, Vol. 1, ISSN: 2582-2810, July 2023.
**[2]** Kannan, Ara. "Kurunthogaiyil Vilangina Soolal." *Aran Pannattu Tamilaivu Minnithal*, ISSN: 2582-399X, July 2023.
[3] Jayapaul, R. *Aganaanooru Moolamum Uraium*. NCBH, Chennai – 600 098, 2007.
[4] Jayapaul, R. *Puranaanooru Moolamum Uraium*. NCBH, Chennai – 600 098, 2007.
[5] Dakshinamoorthy, T. *Aayinkurunooru Moolamum Uraium*. NCBH, Chennai – 600 098, 2007.
[6] Nagarajan, K. *Pathupattu Moolamum Uraium*. *Ainkurunooru Moolamum Uraium*. New Century Book House, Chennai – 600 098, 2011.
[7] Balasubramanian, K. V. *Natrinai Moolamum Uraium*. NCBH, Chennai – 600 098, 2007.
[8] Bhatmadevan. *Neethinool Kazhangiyam*. Pazhamozhi Naanooru, Kotravai Veliyeedu, Chennai – 600 017, 2018.
[9] Puliyoorkesigan. *Natrinai*. Pari Nilayam, Chennai – 600 001, 2007.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் - 2, சிறப்பிதழ் - 3, புரட்டாசி 2054 இ - ஐஎஸ்எஸ்எண்: 2583-0481

# புறநானூறு உணர்த்தும் புலால் உணவு

**மா. பத்மஜா**, பதிவு எண்: 21113154022032, முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்க்கலை ஆய்வகம்,
தெ. தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-0267-7336
**முனைவர் இரா. சொர்ணபமிலா,** உதவிப்பேராசிரியர், தமிழ்க்கலை ஆய்வகம்,
தெ. தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-3677-4644
**DOI: 10.5281/zenodo.8397694**

**ஆய்வுச்சுருக்கம்**

*பண்டைய தமிழரின் வாழ்வில் உணவு ஒரு முக்கிய பங்கு வகித்தது. உணவு, உடலோடு உயிர் வளர்க்கும் தன்மையையுடையது. மக்கள் இயற்கையில் கிடைத்த உணவுப் பொருள்களை உண்டும் தனக்கு தேவையானதை தானே தயாரித்தும், வேட்டையாடியும் வாழ்ந்து வந்தான். வேட்டையாடி வந்த உணவை, விருந்தினருக்கும், வீரர்களுக்கும் அளித்து மகிழ்ந்தான். புலால் உணவை பொரித்தும், அவிழ்த்தும், உணவுடன் சேர்த்து சமைத்து உண்டு வந்தான். விருந்தினருக்கு ஊன் உணவு அளிக்கும் பழக்கம் சங்க காலம் முதல் இன்று வரை உள்ளது. அந்த வகையில் மனிதன், உணவு வகைகளில் புலால் உணவை விரும்பி உண்ட செய்தியையும், புலாலை வாழ்வில் அதிகமாக பயன்படுத்திய தன்மையையும் உற்றுநோக்கி ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.*

**குறிப்புச்சொற்கள்:** அசைவம், உணவு, *புறநானூறு.*

**முன்னுரை**

சங்ககால மக்கள் நாகரீகமுடையவர்களாக காணப்பட்டனர். பல நுட்பங்களான தொழில்களை செய்தும், அவற்றால் பெறப்பட்ட அழகு பொருட்களையும் கையாண்டனர் என்பதை இலக்கியங்களும் தற்போதைய அகழாய்வுகளும் புலப்படுத்துகின்றன. இயற்கையில் கிடைக்கும் பொருட்களையும், வேளாண் முறையில் கிடைக்கும் பொருட்களையும், உணவாக கொண்டு வணிகத்திற்கு உட்படுத்தியும் தமது வாழ்வை மேம்படுத்தினர். பண்டைய மக்கள் இன்பம், துன்பம், கொடை, விருந்து என அவற்றிற்கு ஏற்றார் போல் உணவை உண்டும், விருந்தினரை உபசரித்தும், வீரர்களுக்குரிய சிறப்பு உணவையும் புறநானூற்று நூலின் வழி அறியலாம். மக்கள் தங்கள் வாழ்வில் இறைச்சியை ஒரு பகுதியாக உண்டு வாழ்ந்து வந்தனர். அவை வாழ்வில் ஒரு அங்கமாக இருந்துள்ளது. விலங்குகளை வேட்டையாடியும், அவற்றின் நெய்யில் பொரித்தும், அவித்தும், புலால் உணவை உண்டனர் என்பதை உற்று நோக்கி ஆராய்வதே இக்கட்டுரை நோக்கமாகும்.

**தாவரமில் உணவு**

பழந்தமிழர் தாவரமில் உணவை உண்டு வாழ்ந்து வந்தனர் என்பதை சங்க இலக்கிய

வழி உணர்ந்து கொள்ள முடிகிறது. தாவர மில் உணவு என்பது புலால் உணவை, அதாவது தாவரம் அல்லாத உணவை குறிக்கும். திருவள்ளுவரும், வள்ளலாரும், தமது வாழ்விலும், கொள்கையிலும் புலால் உணவை மறுத்தனர். ஆனால் சங்க கால மக்கள் புலால் உணவை விரும்பி உண்டு வாழ்ந்து வந்தனர். பழந்தமிழர் நீர் நாய் புலி மான் யானை பந்து போன்ற விலங்குகளை வேட்டையாடி உள்ளனர் இவ் விலங்குகளை வேட்டையாட நாய் உறுதுணையாக இருந்தது. (அனுலெட்சுமி, ப. 5) பரிசில் பெற வரும் பாணர்களுக்கும் விருந்தினர்களுக்கும் முதலில் கள்ளை உணவாக கொடுத்து, பின்பு நல்ல மாமிசங்களோடு கூடிய உணவினை விருந்தளிப்பர். இது பழந்தமிழரின் பழக்கமாக இருந்து வந்துள்ளதை சங்க பாடல்கள் வழி அறிந்து கொள்ள முடிகிறது. சங்க காலத்தில் போரும், வீரமும் கொண்டு வீரர்கள் வலிமையோடு செயல்பட, உட்கொண்ட உணவுகளில் புலால் உணவு சிறந்த இடம் வகித்தது. விலங்குகளின் இறைச்சியையும்,பறவையின் இறைச்சியையும், மீனையும் உணவாக உட்கொண்டதை இக்கட்டுரை வழிக் காணலாம்.

**விலங்குகளின் இறைச்சி**

சங்ககாலத்தில் மக்கள் விலங்குகளை வளர்த்தும், அதனை உணவாக உட்கொண்டும் வாழ்ந்து வந்தனர். ஆடு, மாடு, பன்றி முயல், முளவு, யானை போன்றவற்றின் இறைச்சியை உணவாகப் பயன்படுத்தி உள்ளனர். ஊன் என்ற சொல்லை பைந்துடி, பைந்துணி என்றும் கூறுவர். இதனை இறைச்சி என்றும் குறிப்பதுண்டு. மறவர்கள் கள்விலைக்கு மாறாக நிரையைக்கொடுத்தும் கள்ளுண்டனர். இறைச்சியை பச்சையாக தின்றுவிட்டு அந்த கையால் வில்லின் பின் பகுதியை தடவினர். என்ற செய்தியை,

**நிறுத்த ஆயம் தலைச்சென்று உண்டு**
**பச்சூன் தின்று பைந்நிணம் பெருத்த**
**எச்சில் ஈர்ங் கை விற்புரம் திமிரி (புறம். 258: 3-5)**

புறநானூற்று பாடல் வரிகள் மூலம் உணர்ந்து கொள்ள முடிகிறது. மேலும் எலும்புடன் கூடிய இறைச்சியை உட்கொண்டனர். இரவும், பகலும் மக்கள் ஊன் தின்றதால் அவர்களுடைய பற்கள் கொழுவைப் போன்று மழுங்கிப் போயின என்ற செய்தியை,

**கொல்லை யுழுகொழு வேய்ப்பப் பல்லே**
**யெல்லையு மிரவு மூன்றின்று மழுங்கிய (பொரு. 117,n 118)**

என்ற *பொருணராற்றுப்படை* வரிகள் உணர்த்துகின்றன.

**ஆட்டிறைச்சி**

மக்கள் வெள்ளாடு, செம்மறியாடு போன்ற இறைச்சியை அதிகமாக உட்கொண்டனர். இதனை மையூண், துருவை, விடை என்றும் அழைப்பர். ஆட்டிறைச்சியை கிழித்து சுட்டு கோலில் கோர்த்து சுட்டுச் சமைத்து தெய்வங்களுக்கு இலையில் பலியிடுவர் என்பதை,

**மடை வேண்டுநர்க்கு இடை அருகாது**
**அவிழ் வேண்டுநர்க்கு இடை அருளி**

**விடை வீழ்த்தும் சூடு கிழிப்ப (புறம்., 366: 17-19)**

என்ற வரிகள் சுட்டுகின்றன. காய்கின்ற நெய்யில் ஆட்டு இறைச்சியை இட்டு ஓசை உண்டாக பொறித்து, அதனை மக்களுக்கு ஒளி மங்கிய கண்கள் நிறையும்படி விருந்தளித்தனர், பொருணர்களுக்கு ஆட்டுக்கிடாவின் இறைச்சியை உணவாக உண்ணகொடுத்தனர் என்பதை,

**தூராய்துற்றிய துரவையம் புழுக்கின்**

**பாரரை வேவை பருகெனத் தண்டி (பொரு. 103, 104)**

என்ற *பொருநராற்றுபடை* சான்று பகிர்கின்றது.

**ஆமான்இறைச்சி**

ஆமான் என்பது காட்டில் வாழும் பசு வகையைச் சார்ந்த விலங்காகும். சங்க பாடல்களில்

**தடங்கோட்டு ஆமாம் மடங்கல் மாநிரைக் (நற்., 57, 1)**

**ஆமா நல்லேறு சிலைப்பச் சேணின்று (முரு., ப. 315)**

என்ற பாடலடிகளில் வரும் ஆமான், வரையா, ஆமா என்ற சொற்கள் கானகத்து பசுவாகிய ஆமானை குறித்து பயின்று வந்துள்ளன. மேலும், வேலூரிலுள்ள எயிற்றியரின் இல்லத்தில், தங்கும் விருந்தினருக்கு ஆமானின் இறைச்சியை உணவாக கொடுத்து விருந்தளித்தனர் என்ற செய்தியை,

**எயிற்றியர் அட்ட இன் புளி வெஞ்சோறு**

**தேமா மேனிச் சில்விளை யாய மொடு**

**ஆமாம் சுட்டின் அமைவரப் பெறுகுவர (சிறு., பா: 175, 177)**

என்ற சிறுபாணாற்றுப் பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

**பன்றி இறைச்சி**

பொருநன் பசியை போக்கும் தன்மை உடையவன். குட்டையான பன்றியின் கொழுவிய இறைச்சியை நெய்யில் இட்டு பொரித்து, தினம்தோறும் காலையில் சோற்றுணவுடன் கலந்து பசியால் வரும் புலவர்களுக்கு விருந்தளித்தான் என்பதை,

**குறுந்தாள் ஏற்றைக் கொழுங்கன் அவ்விளர்**

**நறுநெய் உருக்கி நாட்சோறு ஈயா**

**வல்லன் எந்தைபசி தீர்த்தல் (புறம்., 379: 8-10)**

புறநானூற்று வரிகள் மூலம் அறிந்து கொள்ளலாம். பன்றியில் பல வகைகள் உண்டு என்றும், அவை காட்டுப்பன்றி, வெள்ளை பன்றி எனவும் கூறுவர். இதில் பிடரியை உடைய ஆண் பன்றியை வில்லினால் அம்பு எய்து கொன்று, மனைவியிடம் கொடுத்து கானவன் சமைக்க சொல்லி, தன் குடியினருக்கு விருந்தளிக்க செய்வான். என்பதை,

**பிணர்ச் சுவற் பன்றி தோல்முனைப் பிணவொடு**

**கணைக்கால் ஏனல் கைம்மிகக் கவர்தலின்**

**கல்அதர் அரும் புழை அல்கி காணவன்**

**... குடிமுறை பகிக்கும் நெடுமலை நாட (நற்., 366: 1-6)**

என்ற *நற்றிணை* பாடல் வரிகள் மூலம் உணர்ந்து கொள்ளமுடிகிறது .

**மான் இறைச்சி**

போர் வீரர்களுக்கு மான் இறைச்சி ஒரு சிறந்த உணவாக இருந்துள்ளது. மானின் இறைச்சியை மன்னன் வேட்டையாடி, அதனை புழுக்கி நெய்யின் தன்மையைப் போன்ற மதுவுடன் வன்பரணருக்கு கொடுத்தான். பெருநற்கிள்ளி தீக்க்கடைக் கோலால், தீயை உண்டாக்கி அதில் கொழுத்த மானின் இறைச்சியை சுட்டுப் பதப்படுத்தி, மறவர்கள் வரும் முன் உண்க என்று கொடுத்தான். என்ற செய்தியை,

**மான் கணம் தொலைச்சிய குறவி அம்கழற்ச்சி**
**வான்கதிர்தீ திருமணி விளங்கும் சென்னி**
**...இரும்பேர் ஒக்கலோடு தினம் எனத் தருதலின்**
**அமிர்தின்மிசைந்து காய் பசி நீங்கி (புறம்., 150: 5, 14)**

என்ற புறநானூற்று பாடல் வரி மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. மானில், இரலை, உழா, கடமா, நவ்வி, மரையான் என்ற ஐந்து வகை மான்கள் இருந்துள்ளது. இவற்றில் இறைச்சியை உண்டு மகிழ்ந்துள்ளனர். கடமானின் இறைச்சியையும், முளவுமானின் இறைச்சியயையும், புளி கலந்த மோரில், நெல்லை சேர்த்து சோறாக்கி குறமகள் விருந்தினர்களுக்கு கொடுத்தாள். என்ற செய்தியை,

**வருவிசை தவிர்த்த கடமான் கொழுங்குறை**
**முளவுமாத் தொலைச்சிய பைந்நிணப் பிளவை**
**பிணவு நாய் முடக்கிய தடியொடு விரைஇ**
**...அகம்மலி உவகை ஆர்வமொடு அளைஇ**
**மகமுறை தடுப்ப மனைதொறும் பெருகுவீர் (மலைபடு. 175 - 185)**

என்ற *மலைபடுகடாம்* பாடல் வரிகள் பகர்கின்றன. மேலும் ஆண்மானை புலி கொன்று தின்றது போக அதன் எஞ்சிய ஊன் பாறையில் காய்ந்து கிடந்தது, அவ்வழியில் சென்ற மக்கள்அவ்வூனை எடுத்து மூங்கில் நெல்லையும், தயிரையும் சேர்த்து வெண்சோறாக்கி இலையில் வைத்து உண்டதாக அகநானூற்று பாடல் - 107 மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

**முயல் இறைச்சி**

முயல் தூய்மையான விலங்கு. காட்டில் வாழ்ந்தாலும், வீட்டிலும் வளர்க்கப்படும் விலங்காக இருக்கின்றது. பண் பாடுவதில் வல்ல பாணன் ஞாயிறு பட்ட பொழுதில் மறக்குடி பெண்ணின் வீட்டிற்கு சென்றான். அங்கு பறவைகளும், கௌதாரிகளையும் இரவு பொழுது சமைக்க முடியாமல் போனதால், முயல் சுட்ட இறைச்சியை உண்ண தருவேன் என்று கூறினர். மக்களும் முயல் இறைச்சியை உண்டனர் என்பதை,

**புறவும் இதலும் அறவும் உண்கெனப்**
**பெய்தற்கு எல்லின்று பொழுதே அதனான்**

**முயல் சுட்ட ஆயினும் தகுவோம் புகுந்தது**

**ஈங்கு இருந்தீமோ முதுவாய் பாண! (புறம்., 319: 6-9)**

என்ற புறநானூற்று பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றன."நெடுஞ்செவி குறு முயல்" என பெருபாணாற்று படை வரிகளும் முயலின் சிறப்பையும், அதனை உண்டச்செய்தியையும் சிறப்பிக்கின்றது.

**முளவுமா இறைச்சி**

முளவுமா என்பதற்கு முள்ளம்பன்றி என்றும் எய்ப்பன்றி என்றும் கூறுவர். இதன் உடம்பு முழுவதும் முட்கள் காணப்படும். வீரர்கள் முள்ளம் பன்றியை வேட்டையாடி ஊண்சோற்றில் வைத்து உண்டனர் என்ற செய்தியை, முளவுமாத் தொலைச்சிய முழுச்சொல் ஆடவர் (புறம்., 325, 6) என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றன. முள்ளம்பன்றியை வேடர்கள் வேட்டையாடினர் என்றும் அதனை ஏயிற்றி உணவாக உட்கொண்டாள்என்ற செய்தியை

**முளவுமா வல்சி யெயினர் தங்கை**

**இளமா வெயிற்றி… (ஐங்., 364: 1–2)**

ஐங்குறுநூற்று பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

**ஊர்வன**

சங்க காலத்தில் மக்கள் பறவையையும், ஊர்வனமாகிய ஆமையையும், உடும்பையும் உணவாக உட்கொண்டு வந்துள்ளனர். ஊர்வனவற்றில் மெதுவாக இயங்குபவை ஆமையாகும். அவை உழவர்களின் வயலில் அதிகமாக இருந்ததையும், உழவர்கள் உழும்பொழுது உழுபடையால் சேற்றில் இருந்து வெட்டப்பட்ட ஆமையின் உடல் மலையென குவிந்து இருக்கும் .அதை விருந்தினருக்கு உணவாகக் கொடுத்து மகிழ்வர் என்ற செய்தியை,

**… உழவர்**

**படை மிளிர்ந்திட்ட யாமையும் அறைநர்**

**… வன்புலக் கேளிர்க்கு வரும் விருந்து அயரும் (புறம்., 42: 13 - 17)**

என்ற புறநானூற்றுவரிகள் உணர்த்துகின்றன. மேலும், ஆமையை உண்பது போல அதன் முட்டையையும் உண்பர் என்றும் வயலில் ஆமையை அவித்து உண்ட செய்தியை, வயலின் ஆமைப் புழுக்கு உண்டு (பட்டி., பா. 64) என்ற பட்டினப்பாலை பாடல் வரி மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

**உடும்புஇறைச்சி**

ஊர்வனவற்றில் விரைவாக ஓடும் தன்மையுடையது உடும்பு. இதனை நெடுவாலி என்றும் கூறுவர். இதன் இறைச்சியை சுட்டும் பொறித்தும் உண்டு வாழ்ந்து வந்துள்ளனர் உடும்பின் இறைச்சியை சிறந்த உணவு என்று கருதினர். உடும்பை பிடித்து அறுத்து அதன் தோலையுரித்து கொழுப்பை வீட்டு முற்றத்தில் விட்டு உறவினருக்கெல்லாம் பங்கு வைத்து கொடுத்தார்கள். இதனால் உண்டான நாற்றம் தெருவெல்லாம் சென்று கமழ்கின்றது என்பதை,

**… ஆடவர்**

**உடும்பு இழுதுஅறுத்து ஒடுங்காலழ் படலைச்**
**சீறில் மூன்றில் கூறு செய்திடுமார்**
**கொள்ளி வைத்த கொழுநிண நாற்றம்**
**மறுகுடன் கமழும் … (புறம். 325: 6-10)**

என்ற புறநானூற்று பாடல் உணர்த்துகின்றது. இதன் இறைச்சியையும், நெய்யையும் வைத்து புளிசோறு சமைத்து விருந்தினருக்கு உணவாகக் கொடுத்தனர். உடும்பினை வேட்டை நாய் கொன்று வேட்டுவருக்கு கொடுக்கும். அதனை அறுத்து உணவாக உட்கொள்வர் அந்தணர்கள் ஊன் உண்ணாதவர் அவர்களும் நாய் பிடித்த உடும்பை உண்ணுவர் என்பதை,

**… நாய் கொண்டால்**
**பார்ப்பாரும் தின்பர் உடும்பு (பழமொழி நானூறு, 35: 3, 4)**

என்ற பழமொழி நானூற்று வரிகள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

**முடிவுரை**

சங்க கால மக்கள் வாழ்வில் ஊன் சிறந்த இடம் வகித்து வந்ததை இலக்கியங்களின் வழி அறிந்து கொள்ள முடிகிறது. மக்கள் தங்கள் விருந்து உணவில் ஊனை முக்கிய உணவாக வைத்திருந்தனர். அதிலும் ஆடு, பன்றி, முழவு, மான் போன்ற இறைச்சி அதிகமாக உண்டு வந்தனர். ஆட்டு இறைச்சியை, நெய்யிலிட்டு பொரித்தும், விருந்தினருக்கு உணவாக வழங்கினர். ஆமான் என்பது காட்டில் வாழும் பசுவகையில் ஒன்று என்றும், அதனை விருந்தினருக்கு சமைத்து விருந்தளித்தனர் என்பதை பாடல் வழி உணர்ந்து கொள்ள முடிகிறது. பன்றியில் பல வகைகள் உண்டு என்றும் அவற்றில் காட்டு பன்றியை உணவாக உட்கொண்டனர். அவற்றை பொரித்தும், சமைத்தும் விருந்தினருக்கும் கானவன் விருந்தளித்தான். மான் இறைச்சியையும், முயல் இறைச்சியையும் உணவாக விருந்தளித்தனர் என்பதைக் கட்டுரை வழி அறிந்து கொள்ள முடிகிறது.

**குறிப்பு நூல்கள்**

[1] அனுலெட்சுமி, சு. “நற்றிணையில் குறுந்தொழில்கள்.” *சாண்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழில் ஆய்வுகள்*, இதழ் 8, மலர் 1, ஜூலை 2023.

[2] கண்ணன், அர. “குறுந்தொகையில் விலங்கின சூழல்.” *அரண் பண்பாட்டு தமிழாய்வு மின்னிதழ்*, ISSN: 2582 - 399X, ஜூலை 2023.

[3] செயபால், இரா. *அகநானூறு மூலமும் உரையும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை - 600098, 2007.

[4] செயபால், இரா. *புறநானூறு மூலமும் உரையும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை - 600098, 2007.

[5] தட்சணாமூர்த்தி, த. *ஐங்குறுநூறு மூலமும் உரையும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை - 600098, 2007.

மலர் - 2, சிறப்பிதழ் - 3, புரட்டாசி 2054 இ - ஐஎஸ்எஸ்எண்: 2583-0481

[6] நாகராஜன், கு. *பத்துப்பாட்டு மூலமும் உரையும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை - 600098, அக்டோபர் 2011 .

[7] பாலசுப்ரமணியன், கு. வே. *நற்றிணை மூலமும் உரையும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை - 600098, 2007.

[8] பத்மதேவன். *நீதிநூல் களஞ்சியம், பழமொழி நானூறு.* கொற்றவை வெளியீடு, சென்னை 600017, ஜனவரி 2018.

[9] புலியூர்க் கேசிகன். *நற்றிணை.* பாரி நிலையம், சென்னை – 600001, 2007.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.